# தமிழ் இணையங்கள் அமைப்பதற்கான வழிமுறைகள்

மா.ஆண்டோ பீட்டர்,
118-நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை-600 029.
மின்னஞ்சல்: <tamil@tamilsoftware.org>

---

இணையத்தில் தமிழின் சக்தி பெருகிவருகிறது. இந்திய மொழிகளில் பெருமளவில் தமிழ் மொழியிலேயே அநேக இணையத்தளங்கள் உள்ளன. தெற்காசிய மற்றும் தென் ஐரோப்பிய மொழிகளின் நடுவே தமிழ்மொழி வீற்றிருந்தாலும் அங்கெல்லாம் கூட தமிழ்மொழியில் கல்வி, செய்திகள், பொழுதுபோக்கு, தகவல்தொழில் நுட்பம், ஆன்மீகம், அறிவியல் என பல துறைகளிலும் இணையங்கள் முளைத்து வருகின்றன.

அயல்நாடுகளில் தற்போது தமிழ்மொழி கற்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. சில தலைமுறையாக அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழர்களின் குடும்பங்களில் தொடர்ந்து தமிழ் மணம் வீச போராட வேண்டிய நிலையில் இணையம் தன் பனியைச் செய்யத் துவங்கியுள்ளது. தமிழ் மொழியை தங்கள் குழந்தைகளும், சந்ததியர்களும் அறிய, அறிவை தீட்ட, அன்றாட தொடர்புகளை வளர்க்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இலங்கை, கனடா, நார்வே, பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி, சிங்கப்பூர், மலேசியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பல தமிழிணையங்கள் வந்தாலும் ஒரு வழிமுறையில்லாமல் உள்ளது. தமிழுக்கு நிலையான எழுத்துரு வடிவமைத்தும் அரிய நிலையிலே உபயோகத்தில் உள்ளது. மொத்தத்தில் தமிழில் இணையத்தை அமைப்பதில் பல்வேறு சந்தேகங்கள் பலரிடம் பல அளவில் உள்ளது.

உலக அளவில் டாட்காம் வணிகம் சீர்கெட்டு இருந்தாலும் சில இணையத்துறைகள் வலிமையாகவே உள்ளது. மென்பொருள் தொழில்நுட்பமும், கல்வித்துறையில் இணைய உலகில் வளர்ச்சிபெற்று முன்னிலையில் உள்ளது. இத்துறையில் தமிழ் மொழியை முன்னிறுத்த நாம் பாடுபடவேண்டும். இணையத்தில கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தளமே முன்னிலையில் உள்ளது. தமிழ் மொழியை கற்பித்தலுக்கான இணையத்தளத்திலும் தமிழ் இணைய பல்கலைக்கழகத்தளமும், பென்சில்வேனியா பல்கலைக்கழகத்(தமிழ்த்துறை) தளமே சிறப்பான நிலையில் உள்ளது. தமிழ் கற்பித்தலுக்கான இணைய தளமே கூட அடிப்படையாக அந்தந்த நாட்டின் கலாச்சராம், பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். தமிழிணையங்களை அமைக்கும் போது எளிமையான வடிவமைப்பு, பதிவிறக்கம் நேரம் ஆகியவற்றை மனதில் கொண்டே அமைக்கவேண்டும். தமிழ்க்கல்வி குறித்த தளங்களை பொறுத்தவரை உலாவிகளே (Browsers) மாணவர்களாவார்கள். கணிப்பொறிகளே ஆசிரியர்கள். ஆசிரியர்களின் சிறப்பியல்புகள் அனைத்தையும் நாம் இணையவடிவமைப்பில் அளித்து மாணவர்களுக்கு விருந்து படைக்க வேண்டும்.

தமிழிணைய வடிவமைப்பு வழிமுறைகளை இயற்றுவதற்காக www.kumudam.com, www.tamilcinema.com, www.tamilvu.org, www.tcwords.com, www.vikatan.com மற்றும் பல தளங்களை ஆழ்ந்து நோக்கினோம். தமிழ் இணையங்களை வடிவமைக்க சிந்திப்பவர்களுக்கும், வடிவமைப்பாளர்களுக்கும் நாம் அளிக்கும் வழிமுறைகள்:

1. காகித அச்சுகளில் வெளிப்படும் அழகிய வடிவமைப்பு, வண்ணம் ஆகியன எளிமையாகவும் அழகாகவும் இணையவடிவமைப்பிலும் படைத்தல் வேண்டும். பார்வையாளர்கள்

வெகுநேரம் கூர்ந்து திரையகத்தை படிக்கும் படியான வண்ணங்களை தேர்வு செய்தல் வேண்டும்.

2. வடிவமைப்பில் சுட்டிக்காட்ட பயன்படுத்தப்படும் சின்னங்கள் (Icons). பொத்தான்கள் (Buttons) ஆகியன ஒரு இணையத்தளத்தின் அனைத்துப் பக்கங்களிலும் சீராக ஒரே அமைப்பில் இருத்தல் வேண்டும். தமிழனை, தமிழகத்தை அடையாளம் காட்டும் சின்னங்களை பயன்படுத்தலாம்.

3. இணையத்தில் நாம் சட்டங்களை (Frames) பிரித்துக் காட்டும்படி பயன்படுத்தி இருந்தால், இணையத்தளம் முழுவதும் ஒரே அளவுகளில் இருத்தல் வேண்டும். இடது, வலது, மேல், கீழ் சட்டங்கள் பக்கத்திற்கு பக்கம் வித்தியாசமாக இருந்தால் பார்வையாளர்களுக்கு சங்கடங்களை ஏற்படுத்தும். தமிழ் எழுத்துரு பொருத்தும் முறை மற்றும் சந்தேக விளக்கங்களை மேல் சட்டத்தின் மூளையில் நிரந்தரமாக அளித்தல் நல்லது.

4. இணையத்தில் தமிழ் மொழியை அமைக்கும் போது தமிழக அரசு தரப்படுத்திய TAM மற்றும் TAB எழுத்துருக்களையே பயன்படுத்தவேண்டும். இணையம் மற்றும் பதிப்பக பணியை தமிழில் மட்டும் மேற்கொள்பவர்கள் TAM எழுத்துருவை பயன்படுத்தலாம். இணையம் மற்றும் தகவல் பரிமாற்ற பணியில் இருமொழியில் செயல்படுத்துபவர்கள் TAB எழுத்துருக்களை பயன்படுத்தலாம். இவ்வெழுத்துக்களை இணையத்தில் பதிவிறக்கம் செய்யாமலே படிக்க ''டைனமிக் எழுத்துருக்களை'' (Dynamic Fonts) புகுத்தல் வேண்டும். இதற்கென முன்கூட்டியே இணைய பக்கங்களில் கவனம் செலுத்தி தமிழ் எழுத்துரு குறியாக்கங்களை இணைத்தல் வேண்டும். இணையத்தில் ஒவ்வொரு பக்கத்திற்கும் நாம் மாறிக்கொண்டிருக்கும் போது சீராக தமிழ் மொழியிலே பக்கம் தோன்ற தொழிற்நுட்ப நிரல்களுக்கும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

5. புகைப்படங்கள், அசைவூட்ட கோப்புகளை(Animation) பெரிய அளவில் படைத்தல் கூடாது. புகைப்படமோ அல்லது அசைவூட்டமோ மிக சிறிய அளவில் தமிழ் இணைய பக்கங்களிடையே அளித்து விட்டு, அதை நாம் சொடுக்கியவுடன் பெரிய அளவில் தோற்றமளிக்க செய்தல் வேண்டும். முன்கூட்டியே பெரிய அளவில் அசைவூட்ட கோப்புகளை காண்பித்தால் பார்வையிடும் நேரம் கூடுவதுடன், மீண்டும் மீண்டும் பார்வையிடுவோருக்கு எரிச்சலை ஏற்படுத்தும்.

6. ஆடியோ மற்றும் வீடியோ ஃபைல்கள் இணையப்பக்கத்தில் புகுத்திவிட்டு அடுத்த பக்கத்தில் பெரிய அளவில் தோன்ற வைக்கலாம். ஆடியோ, வீடியோ கோப்புகளுக்கு தனித்தனிச்சின்னங்களை வடிவமைத்து எளிமையாக்கலாம். ஆடியோ தமிழ், ஆடியோ ஆங்கிலம் என்பதை கூட சின்னம் மூலமாக வேறுபடுத்திக் காட்டலாம். வீடியோ ஃபைல்களுக்கும் இந்த முறையைக் கையாளலாம்.

7. கோப்பு பெயர்களும் (File Names), கோப்புரைகளும் (Folder), கோப்பகங்களும் (Directory), இணையத்தளம் முழுவதும் சீரான பெயர் மற்றும் எண் வரிசையை அளித்தால் நல்லது. பிற்பாடு புதிதாக படைக்கவோ, திருத்தவோ அல்லது அழிக்கவோ எளிமையாக இருக்கும். வடிவமைப்பாளர்கள் மற்றும் உலாவிகள் சுலபமாக புரிந்து கொள்ள உதவியாக இருக்கும். எழுத்துரு தேவைகள், தொழிற்நுட்பம், உரைகள் (Text) என தனித்தனியாக பிரித்து பாதுகாப்பது நல்லது.

8. கிராபிக்ஸ் கோப்புகள், வீடியோ மற்றும் ஆடியோ ஃபைல்களை அப்படியே

பயன்படுத்துவது நல்லதல்ல. *.wave, *.midi, *.avi, *.fli, *.fle ஆகிய கோப்பு வகைகளை தமிழ் இணையங்களில் தவிர்ப்பது நல்லது. இந்த கோப்பு முறைகளை பல மடங்கு சுருக்கி கையாளும் முறையை நாம் பயன்படுத்தல் வேண்டும். ரியல் ஆடியோ மற்றும் வீடியோ கோப்பு முறைகளை நாம் பயன்படுத்தினால் 90 சதவீத கோப்பு தடிமன் அளவை சுருக்கிக்கொள்ளமுடியும். இது குறித்து தகவல்களை ரியல் ஆடியோ இணையம் மூலம் கூடுதலாக பெற்றுக்கொள்ளலாம்.

9. தமிழ் இணையங்களை படைக்கத் துவங்கும் ஆரம்ப நிலையிலேயே 800X600 டிபிஐ தெளிவுத்திறன் (Resolution) திரையகத்திறனில் படைத்தல் வேண்டும். தமிழ் இணைய வடிவமைப்பை செய்யும் போது 17" க்கும் மேற்பட்ட அளவுகளில் இருக்கும் திரையகங்களை பயன்படுத்தக் கூடாது. பெரிய அளவில் வடிவமைப்பை செய்துவிட்டு சிறிய அளவில் பார்வையிடும் போது மாற்றங்களை காணலாம். பொதுவாக 14" திரையமே பெரும்பாலும் பயன்படுத்துவதால், 14" திரையக உதவியுடன் இணைய வடிவமைப்பு செய்தால் நல்லது.

10. தமிழ் இணைய வடிவமைப்பு பணி முடிந்தவுடன் தளத்தில் பதித்து விடக்கூடாது. இணையத்தில் பல்வேறு வகையான உலாவி (Browsers) வகைகள் உள்ளன. உதராணத்திற்கு Netscape, Internet Explorer..., மற்றும் பல. இவையனைத்திலும் தமிழ் மொழி கலந்த பல்வேறு இணைய வடிவமைப்பு ஒருங்கிணைந்து சீராக வருகிறதா என பார்வையிடுதல் அவசியமாகும்.